JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Dw-1- Witness
for Prosecution

STC No. 693/2022 Crime No. - Station -

| | | | |
|---|---|---|---|
| Name | **Dw1 –புவனேஸ்வரன்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 21.05.2026 | | | |

**முதல் விசாரணை**

நான் இந்த நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணை மூலம் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது ஈரோடு வருமானவரித்துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் 2022–2023 ம் வருடத்திற்கான மோகன் குமாரின் வருமானவரிக் கணக்கு தாக்கல் விவரம் கொண்டு வந்துள்ளேன். மேற்படி **2022–2023 ம் வருடத்திற்கான மோகன் குமாரின் வருமானவரிக் கணக்கு எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 2022–2023 ம் வருடத்திற்கான மோகன் குமாரின் மொத்த வருமானம் ரூ.4,20,000/– ஆகும். மோகன் குமாரின் வருமான வரி கணக்கில் யாருக்கும் கடன் கொடுத்ததாக இல்லை.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஒரு நபருக்கு கடன் கொடுத்தால், அதனை வருமான வரிக் கணக்கில் காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்றால், சரியல்ல. வருமான வரிக் கணக்கில் அவரிடம் கேட்டிருந்தால், அவர் அதனை தாக்கல் செய்திருக்க வேண்டும். தொழில் சம்பந்தமாக புகார்தாரிடம் எதுவும் கேட்கவில்லை என்றால், சரியல்ல. அவரது தொழில் சம்பந்தமான கடன் எதுவும் இல்லை என குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளார். ஒருவர் தனது வருமான கணக்கில் தனது வருமானம் மற்றும் செலவு போக மீதமுள்ள லாபத் தொகையை தான் தனது வருமான வரி கணக்கில் காட்டுவார்கள் என்றால், சரிதான். மேற்படி விபரத்தில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் தான் அவருக்கு அழைப்பாணை அனுப்பி விசாரிப்போம் என்றால், சரிதான். 2022–2023ம் ஆண்டு வருமான வரி தாக்கல் செய்ததற்கு தற்போது வரை மோகன் குமாருக்கு அழைப்பாணை அனுப்பவில்லை என்றால், சரிதான்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.05.21 05:40:33 +0530

**மறு விசாரணை**

தொழில் ரீதியாக கடன் கொடுத்திருந்தால், வருமான வரிக் கணக்கில் தாக்கல் செய்ய வேண்டும் என்றால், சரிதான். மோகன் குமார் தாக்கல் செய்த வருமான வரிக் கணக்கில் தனக்கு Freight transport by road என்கிற தொழில் முலம் தான் வருமானம் வந்தது என்று கூறியுள்ளார் என்றால், சரிதான். TN 36 BZ 2877 என்கிற ஒரு வாகனத்தை வருமான வரிக் கணக்கில் காட்டியுள்ளார் என்றால், சரிதான்.

**புகார்தார தரப்பில் குறுக்கு விசாரணை**

ஒரு நபர் பணத்தை பல வருடங்களாக சேமித்து வைத்திருந்தாலும், அந்த வருட வருமான வரி கணக்கில் காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்றால், சரிதான். வருமான வரிக் கணக்கில் மோகன் குமாரிடம் கேட்கவில்லை.

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.05.21 05:40:38 +0530

**Sd/– (J.RAJKUMAR)**
**Judicial Magistrate No.1, Bhavani**